ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

असज्जनानां चरितोपदेशनैरुपैमि संसारविराग निश्चयम् ।
गुरोरिवासौ ह्युपदेशतोऽस्थितः कथं प्रतिद्वेषमियाद्विषत्स्वपि ॥

"அஸாது ஜனங்கள் ஸம்ஸார சக்கிரத்திலகப்பட்டுப் பரிதபிக்கும் சரித்திரங்களைக் கேட்டதும் அவைகளையே பெரிய உபதேசங்களாகக் கொண்டு ஸம்ஸாரத்தில் ஆசைகொள்வதில் பயனில்லை. வைராக்கியத்தை அடையவேண்டியதுதான் உசிதம், என்று நிச்சயத்தை அடைகிறேன். "இந்த நிச்சயம் வரவேண்டுமே! இது எப்படி வரப்போகிறது. ஸத்குருக்கள் உபதேசித்து அனுக்கிரஹித்தாலல்லவா கிடைக்கும்" என்று வெகு நாளாகப் பிரார்த்திக்கப்பட்டுவந்த இந்த வைராக்கிய நிச்சயம் ஸத் குருக்களின் உபதேச மொழிகளாலேற்பட்டதுபோல் அஸாதுக்களின் சரித்திரங்களினின்றே உண்டாய்விட்டது. ஆகவே ஸத்குருக்களிடம் நன்றி பாராட்டுவதுபோல் அஸாதுக்களிடத்தும் நன்றி பாராட்டுவதல்லவா நல்லது. அப்படியிருக்கையில் அவர்கள் துவேஷப்பட்டாலும் திருப்பி அவர்களிடம் துவேஷத்தை அடைவதுஎப்படி உசிதமாகும்? அஸாதுக்கள் அகாரணமாய் அன்னியர்களிடத்தில் அஸூயைப்படுவதும், ஆத்திரப் படுவதும், தூஷிப்பதும். துவேஷிப்பதும் ஸஹஜம். அதனால் அவர்கள் க்ஷேமப்படுவதொன்றுமில்லை. கஷ்டத்திற்குமாத்திரம் ஆளாவார்கள். ஸம்ஸாரக் கஷ்டங்களைப் பலவிதமாகவும் அனுபவிப்பார்கள். அப்படி அனுபவிக்கும் பரிதாபநிலையைப் பார்த்தால் "இப்படி அன்னியத்துவேஷமும், செய்யவேண்டாம்-அனர்த்தங்களையும் அனுபவிக்கவேண்டாமென்று ஸம்ஸாரத்தில் நிச்சயமாய் வைராக்கியத்தை அடையவேண்டுமென்று தோன்றிவிடும். இவ்வாறாக அஸாது ஜனங்கள் வைராக்கியமடைய வழி சாட்டிகளாகிறார்கள். இந்த வைராக்கியந்தான் வெகுநாளாக வேண்டப் பட்டதாயுள்ளது. அது ஸத்குரூபதேசத்தால் கிடைத்ததுபோல் அஸாதுக்களின் சரித்திரோபதேசத்தாலேயே கிடைத்துவிடுமாயின் அவர்களிடம் நன்றிபாராட்டுவதே நல்லது. அவர்கள் ஸஹஜ தர்மத்தால் துவேஷிப்பார்களாயினும் விவேகிகள் திருப்பி துவேஷப்படக்கூடாது. ஸம்ஸாரவைசித்திரியம்இப்படித்தானிருக்குமென்றுமனதைஅடக்கிக்கொண்டு ஏப்படியாவது ஸம்ஸாரபந்தத்தைவிட்டு வெளிப்படுவதற்கு உறுதியாய் தீவிர வைராக்கியத்தையே அடையவேண்டும். வைராக்கியமுள்ளவனுக்குத்தான் ஆத்துமஞானம் வரும். அதனால் மோக்ஷமடையலாம், அப்படியே யாவரும் சிரேயஸ்ஸை அடைவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.

ப்ரஜாபதி-௵ பங்குனி௴ ௪-௨

ஆசாரம்.

ஆர்யச் சிறுவர்களுக்கு பால்யம் முதற்கொண்டே அதிலும் உபநயனமானபிறகு கண்டிப்பாய் ஆசாரத்தைப்பழக்கிக்கொடுக்க வேண்டுமென்றும் பிறகு கல்வி புகட்டவேண்டுமென்றும் சாஸ்திரம் விதிக்கின்றது. முன்காலத்தில் அவ்விதம்தான் ஆர்யபரம்பரையில் அனுஷ்டித்தும்வந்தார்கள், அப்படி ஆசாரத்துடன் செய்யப்பட்டுவரும் ஸகலகர்மங்களும்சரியானபயனை அளித்தன. தற்காலத்திலும்பெரும்பாலும் பிராணிகள் கர்மாக்களை அனுஷ்டிக்காமலிருக்கவில்லை. தேவதைகளிடத்தில் பக்தி பாராட்டாமலுமில்லை. புண்ய கதைகளைக் கேழ்க்காமலுமில்லை: ஓரோரிடத்தில் பார்த்தால் கூட்டம் தாங்கவில்லை. தீர்த்தங்களிலும், ஆலயங்களிலும், விசேஷ தினங்களிலும் சொல்லவொண்ணாத கூட்டம் கூடுகின்றது. புராணாதிகள் படிக்கின்றவிடத்தில் கூட்டத்திற்குக் குறைவில்லை, ஆனால் இப்படிக்கூடுகின்ற ஜனங்களுக்கும் சாந்திகரமான நிலையும், கோரின பயனும் கிடைப்பதில்லை. அதற்குக் காரணமென்னவென்று ஆலோசித்துப்பார்ப்போமானால் ஆசாரக்குறைவுதானென்று சாஸ்திரீயதிருஷ்டியால்த் தெரியவருகின்றது. आचार हीनं न पुनन्ति वेदाः "ஆசாரமில்லாதவனை வேதத்தில் விதிக்கப்பட்ட எவ்வித கர்மங்களும் பரிசுத்திசெய்துவைத்துப் பயனை அளிக்காது" என்றும் போதிக்கின்றது. எந்தப்பயனைப் பெற வேண்டுமானாலும் அதற்குத்தகுந்த செய்யவேண்டும். சுத்தி பெறுவிடில் பயன் அனுபவிக்கஇயலாது. அங்ஙனமே சாஸ்திரமும்

विड्वराहादिदेहेन नह्यैन्द्रं लभ्यते पदम् ॥

"பிப்பன்றி சரீரத்தில் இந்திரபதவி கிடைக்காதன்றோ" என்று கூறுகின்றது. தற்காலத்திய குழந்தைகளைப் பெற்றோர்கள் ஆசாரக்குறைவாகவே நடத்திவருகிறார்கள். அதுதான் அவர்களுக்கு ஸந்தோஷகரமாயிருக்கின்றது. வைதிக குடும்பங்களிலும் இதுவே வழக்கமாகிவிட்டது. குழந்தைகளைக் கொஞ்சிக் குலாவிக் கொண்

டாம்பொழுது "குழந்தாய் நீ என்ன படிக்கப்போகிறுய்" என்று கேழ்ப்பார்கள். உடனே அந்தக் குழந்தையும் தற்காலத்திய வாஸனைப்படி "இங்கிலீஷ்தான் படிப்பேன்" என்றுசொல்லும். இதைக்கேட்ட பெற்றோர்களுக்கு அச்சமயமுண்டாகுமானந்தத்திற்கு அளவே கிடையாது. கொஞ்சநாளாகவே குடுமிவைக்க வேண்டிய நாளில் அதைச்செய்யாமல் கிருப்புசெய்துகொள்ளச் சொல்லிக் கோணமகிடுமிட்டுப் பொட்டிட்டுச் சட்டையுமணிய விட்டுப்பார்த்துவிட்டால் பிரும்மானந்தமுமிதற்கீடாகாது. இந்த வேஷத்துடன் பள்ளிசென்று மிலேச்சாதிகளின் பழக்கமேற்படவே பற்களில்வைத்து நகத்தைக் கடித்துக்கொள்வது ஸஹஜமாய்விடுகிறது. வீட்டிலுமிந்தப்பழக்கமேவந்துவிடுகிறது. அப்படி இருக்கையில் ஆசாரமெங்கே பழகப்போகிறது. இந்த நிலையிலிருந்து மேல்படிப்புவரையில் அநாசாரமும் துராசாரமும்தான் மேலுக்குமேல் அதிகப்பட்டுவருகிறது. இப்படி பால்ய யௌவன காலங்களில் ஆசாரலேசமுமில்லாமல் போகிறபோது இவன் எவ்வளவு ஸத்கார்யம்செய்யினும் சாம்பலில் விட்ட ஆஹுதி போல் ஆய்விடுகிறது. சிலபேருக்கு உத்யோகம் கிடைத்தால் அதற்காகவாவது கொஞ்சம் கௌரவமாயிருக்கவேண்டுமென்று ஒழுங்காயிருப்பான். உத்யோகம் கிடைக்காவிடில் பிழைப்புக்கு வழி தெரியாமல் விழிக்கும்பொழுது அண்டுவார் அடக்குவார் இல்லாமல் தன்கொண்டியாய் திரியவேண்டியதாகிறது. போதாக்குறைக்குப்பேபர்கள் அவர்களின் துஷ்கிருத்தியங்களுக்கு வேண்டியவரை ஒத்தாசைசெய்துவிடுகிறது. இதில் தேற்சியடைந்தவர்களுக்கு வைதிகாசாரம் பிடிக்கிறதில்லை. அதனுல் அதைச் சீர் திருத்தத் தலைப்படுகிறுர்கள். இவர்களைக் கைதூக்கிவிடப் புதிது புதிதாய் சங்கங்களும், கூட்டங்களும்தோன்றி ஸஹாயம்செய்து வருகின்றன. வைதிகாசாரம் குறையவேண்டியவழி வைதிக குடும்பங்களிலேயே இவ்வாறு ஏற்பட்டுவிடுகின்றது. அதனுல் வேண்டியஹிதம் கிடைக்கவில்லை. எல்லோரும் கஷ்டப்படுகிறுர்கள். அதற்கு இடங்கொடுக்காமல் சிலாவது வைதிகப்பிடிப்பு உள்ளவாயிருந்தால் அவ்வளவு கஷ்டமேற்படாது. ஆகையால் கஷ்டத்திற்கு இடங்கொடுக்காமல் க்ஷேமத்தையடையும் வழியை யாவரும் தேடிக்கொள்வார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

ஸ்ரீமத் ராமாயண விமர்சம்.

ஸ்ரீமத் ராமாயணம் என்னும் மிகச் சிறந்ததான இதிஹாஸ கிரந்தத்தை ஹிமாசலம்முதல் கன்னியாகுமரிவரையிலும், வெளி தேசங்களிலும் வைதிகமதத்தை அவலம்பிக்கும்ஸகலரும் படனம் செய்தும், பூஜித்தும்வருகிறார்கள். பூமண்டலத்திலுள்ள எல்லா பாஷைகளிலும் இந்தக் கிரந்தம் மொழிபெயர்த்துத்திலகம்போல் விளங்கிவருகிறது. ராமாயணத்தின் கதை தெரியாதவர்கள் சிலரேயாவர். 18-புராணங்களிலும் மகாபாரதத்திலும் பழமை யான அநேகம் கிரந்தங்களிலும் ஸ்ரீமத் ராமாயணத்தைப்பற்றிக் கூறியிருக்கிறது. இந்தக் காரணத்தைக்கொண்டே ஆதிகாவ்யம் என்று நன்றாய் விளங்குகிறது. மனிதர்களுக்கும் தேவதைக ளுக்கும் சகிக்கவொண்ணாத கொடுமையைச் செய்து பிர்ம்மாவின் வரத்தால் அபரிமிதமான வலுவையடைந்து தண்டகாரண்யத்தி லும், ஆர்யாவர்த்தத்திலும் தபஸ்பண்ணிக்கொண்டிருந்த மஹ ரிஷிகளை விழுங்கியும், ஹிம்ஸித்தும்வரும்படி ராக்ஷஸக் கூட்டங் களுக்குக் கட்டளையிட்டு அவர்களுக்குத் தலைவனாகக் கரனை ஜன ஸ்தானத்தில் இருத்தி மேல்பார்வையாக லங்கையில் வாசம்செய்து கொண்டிருந்த கொடிய அரக்கனான தசமுகனை இஷ்டமித்திர பந் துக்களுடன் அழித்தருளிய ஸாக்ஷாத் திருமாலின் அம்சமான ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி இதன் கதாநாயகர். இந்த ஸ்வாமியின் ஜனன பூமி மூன்று பக்கங்களிலும் பரிசுத்தமான ஸரயூ நதியால் சூழப்பெற்ற அயோத்தி என்று வழங்குகிறார்கள். பாக்கி விஷயங்கள் பூராவும் அந்த கிரந்தத்தில் பிரகாசமாய் வரையப்பட் டிருக்கிறது. இந்த கிரந்தகர்த்தா வருணபுத்திரரான வால்மீகி பகவான். ஸ்ரீமத் ராமாயாணமானது நூறுகோடி விஸ்தாரமான கிரந்தமாக தேவலோகத்திலிருந்தாலும் தன் தபோ மாஹாத்மியத் தால் எளிதில்ஜனங்கள்உஜ்ஜீவிக்கும்பொருட்டு ஒவ்வொரு ஆயிரம் சுலோகங்களுக்கும் காயத்ரீ பீஜாக்ஷரத்தைத் தலைமையாகவைத்து 24000-கிரந்தமாகவும், 500-ஸர்க்கங்களாகவும், 6-காண்டங்களா கவும் பிறகு உத்தரகாண்டத்தையும் செய்ததாகவும் சொல்லி யிருக்கிறார்

चतुर्विंशत्सहस्राणि श्लोकानामुक्तवानृषिः ।
तथा सर्गशतान्पंचषट्कांडानितथोत्तरम् ॥

சிலர் யுத்தகாண்டத்தோடு-537-ஸர்க்கங்கள் முடிகின்றன. உத்தர காண்டம் 111-ஸர்க்கங்கள் பாக்கியிருக்கின்றன. ஆக 648-ஸர்க்கங்களும் ப்ரக்ஷிப்த ஸர்க்கங்களும் காணப்படுகின்றன என்றார். மேலும் உத்தரகாண்டத்தில் காயத்திரியின் 21-வது அக்ஷரமாகிய

प्राप्तराज्यस्य रामस्य राक्षसानां वधे कृते ।
आजग्मूऋषयस्सर्वे राघवं प्रतिनंदितुम् ॥

என்றிருப்பதால் உத்தரகாண்டமும் உள்ளடங்கினதாகவே தெரிகிறது. இதைப்பற்றி அநேகர் பிரமித்து ப்ரக்ஷிப்தம் இவை என்றும், அல்லது 148-ஸர்க்கங்களும் ப்ரக்ஷிப்தமாயிருக்கலாமோ என்றும் ஸந்தேகிக்கிறார்கள். ஒரு சிறந்த தபஸ்வி லோகநாதனுடைய அவதார குணங்களை வர்ணிக்கப்புகும்போது ஆனந்த பாவசத்தால் தான் ஸங்கல்ப்பித்துக்கொண்ட எண்ணிக்கைக்கு மேல் போய்விட்டது. ஸாமான்ய விஷயமாய் இருந்திருக்குமா. இதன் தத்வங்களைத்தங்கள் ஆசாரியாள்மூலமாய் கேட்டு சந்தேக நிவர்த்திசெய்து கொள்வது வெகு சுலபமானது. வீணாக ஆக்ஷேபம் செய்வதில் யாதுபயன். சக்கிரவர்த்தித் திருமகனின் பட்டாபிஷேககாலத்தில் இந்த கிரந்தத்தை வால்மீகிரிஷிசெய்ததாய் ஏற்படுகிறது. அதாவது திரேதாயுகத்தில் என்றுதெரிகிறது. ஹிமஸேதுபரியந்தம் பிரதி கிராமங்களிலும் க்ஷேத்திரங்களிலும் ஸ்ரீராமஸ்வாமியைப் பட்டாபஷேககோலத்தோடாவது ஸ்ரீராமர் லக்ஷ்மணன், ஸீதை, அனுமான் உள்படவாவது இல்லாதஸ்தலம் அல்ப்பமாயிருக்கும் என்பது நிச்சயம். இந்தக் கிரந்தத்தைச் சகலரும் பாராயணம்செய்யலாமாயினும் பிரயோஜனத்தை அபேக்ஷிப்பவர்கள் श्रोतव्यं क्षात्रियैर्द्विजात् । பிராம்மணர்கள் மூலமாய்க் கேழ்க்கவேண்டுமென்றும் श्रोतव्यमेतान्नियमेन सद्भिः । இதைநியமத்தோடு பக்தியுடன் ஸாதுக்கள் கேழ்க்கவேணுமென்றும் श्रोतव्यं अनसूयया பொறாமையில்லாமல் கேழ்க்கவேணுமென்றும் சொல்லியிருக்கிறது. இந்தகிரந்த கர்த்தாவின் வாக்கின் உண்மையை அறிந்துகொள்வதற்கு மூன்றுமதாசாரியாளும் தங்களுக்கு அனுகூலமான வியாக்கியானங்களை உரைத்திருக்கிறார்கள். அவர்கள்

அபிப்பிராயம் எப்படிப்பட்டதாயினும் மூலக்ரந்தமாகிய ஸ்ரீமத் ராமாயணத்தைக்கொண்டே ஸகலரும் மோக்ஷத்தைஅடையலாம் என்பது அவர்களின் திருவுள்ளம் என்று தெரிகிறது. ஸ்மிருதி கர்த்தாவாகிய காலவுசரித்திரத்தில் ऊरूजपटोलोपाख्याने என்றிருப்பதாயும் அதில் ஸ்ரீமத் ராமாயண மாஹாத்மியம் கூறப்பட்டிருப்பதாயும் நான்பெரியோர்களால் கேழ்வைப்பட்டிருக்கிறேன். சித்ரை மாதம் புனர்வஸு நக்ஷத்திரத்தில் ஸ்ரீமத் ராமாணத்தை ஆரம்பித்துத் தினம் 20-ஸர்க்கம் வீதம் படனம்செய்து அடுத்த புஷ்யத்தில் பட்டாபிஷேகம் செய்விப்பது 1. வாஸந்த நவாத்திரமாகிய ஸ்ரீராமநவமியில் ஆரம்பித்து 9-நாளில் படனம்செய்து 10-வது நாள் பட்டாபிஷேகம்செய்வது 2. சாரத நவாத்திரமாகிய ஆசுவியுஜ சுத்தபிரதமையில் ஆரம்பித்து விஜயதசமியில் பட்டாபிஷேகம் செய்விப்பது 3. சுந்தரகாண்டம்மட்டில் தினம் 7-சர்க்கம்வீதம் படனம்செய்து 7-வது தடவையில் பட்டாபிஷேகம் செய்வது 4. என்கிற இவைகளில் ஒவ்வொன்றுக்கும் அபரிமிதமான பலனை சொல்லியிருக்கிறது.

இவ்வளவு நியமமும் வைதிகமதத்தை அனுசரிக்கும் ஸகல ஆஸ்திகராலும் போற்றப்பட்டு வருகிறது. ஸ்திரீ புருஷர்கள் படிக்கத்தெரியாதவர்கள்வரையில் ராமாயணம்கேட்டாய்விட்டது. போதும், இனி அவசியமில்லை என்று சொல்லுபவர் ஒருவருமே கிடையாது. கொஞ்சகாலக்கு முன் பிராமணர்களையும் வேதங்களையும், புராணங்களையும் தூஷிப்பதையே உருவாக அமையப்பெற்ற திராவிடன் என்னும் பத்திரிகையில் ராமாயண ரஹஸியம் என்று மகுடமிட்டு ஒரு வியாஸம் வெளியானதைப் பார்த்தேன். அதில் ராமாயணம் கட்டுக்கதையென்றும் ராக்ஷஸர்களும்வானரர்களும், தங்களைப்போலொத்த திராவிட சைவர்களாயும் மது மாமிஸம் சாப்பிடாதவர்களாயும், சிறந்த நாகரீகம்படைத்தவர்களாயுமிருந்த தங்கள் முன்னோர்களின் அதிபதியான ராவணனுக்குப் பத்துத்தலைகள் இருந்ததே கிடையாதென்றும் ஆரியாவர்த்தத்திலிருந்து வந்த ரிஷிகள் தந்திரமாய் அயோத்தியிலிருந்து ராமனை தண்டகாரண்யத்துக்குத் தருவித்துத் தங்களுக்கு குணத்தில் சற்று மாறுபாடாயிருந்தவர்களை குரங்குகள் எனப் பெயர்கொடுத்து ராமனுக்குச் சிநேகம்செய்துவைத்து அவர்களின் உதவியால் மித்திர பேதம்செய்வித்து யுத்தத்தை உண்டுபண்ணி

ரொம்ப நல்லவராயும் சிறந்த தர்மிஷ்டராயுமிருந்த ராவணனை கொடுங்கோல் மன்னன் என்றும் துஷ்டன் என்றும் தூஷித்துக் கொலைசெய்துவிட்டதாக ராமாயணத்தில் வால்மீகிரிஷி கற்பனை செய்து எழுதி வைத்திருக்கிறார். வானரர்கள் எனப்படும் நம் திராவிடர்களுக்கு நீண்டவாலும் அடர்ந்த மயிரும் இருந்ததே கிடையாது. அக்கிரமமாய் நம்மைப்பற்றி கூறியிருக்கும் அபத்த ராமாயணத்தை ஒருவரும் நம்பக்கூடாது என்றும் தொடர்ந்து எழுதுவதாயும் வரைந்திருக்கிறது. ஸ்ரீமத் ராமாயணத்தில் ராமஸ்வாமியானவர் துஷ்டராக்ஷஸப்பூண்டை அழித்து ஸாதுக்களான விபீஷணன் உள்படசிலரை லங்கையில்இருக்கும்படி செய்ததாகச் சொல்லியிருக்கிறது. இந்தப் பத்திரிகையின்வாயிலாக ராக்ஷஸப் பூண்டுகள் அழியாமல் இன்னும் ஏராளமாய் செழித்திருப்பதாகவும் ஏற்படுகிறது. கீதையில் ஸ்ரீபகவான்

परित्राणाय साधूनां विनाशाय चदुष्कृताम् ।
धर्मसंस्थापनार्थाय सम्भवामि युगे युगे ॥

ஸாதுக்களைக் காப்பாற்றுவதற்கும் துஷ்டர்களை அழிப்பதற்கும் தர்மத்தைஸ்தாபிக்கும்பொருட்டும் யுகந்தோறும் அவதரிக்கிறேன் என்று கூறியிருக்கிறார். எந்த மனிதனுக்கும் பிராணவியோக காலத்தில் பகவத் த்யானம்செய்தால் மோக்ஷமுண்டாகும் என்று பெரியோர்களின் கொள்கை. சாஸ்திரங்களும் அப்படியே கூறுகிறது. இதற்கு ஜடபரதோபாக்கியானம் முதலிய அநேகம் திருஷ்டாந்தங்கள் இருக்கின்றன. மேலும் ஹிரண்யாக்ஷனை நரஸிம்மாவதாரத்தில் வதம்பண்ணும்போது அடுத்த ஜன்மத்தில் பத்துத்தலையும் இருபது கைகளுடனும் ஜனித்துப் பழிவாங்க வேண்டுமென்று பிராணனைவிட்டதாயும் அதேமாதிரி லங்கையில் தசக்கிரீவனாகப் பிறந்து ஸ்ரீராமஸ்வாமியால் அடிபட்டு மாளும் போது மனுஷ்ய ஜன்மமே சிறந்தது. அடுத்த பிறப்பில் ஸாதுக்கள் குலத்திலும் பந்துவாயும், மனிதனாயும் ஜனித்து இவனைக் கொல்லவேணுமென்று பிராணனைவிட்டு சேதிதேசத்தில் சிசுபாலனாகப் பிறந்து ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவின் சக்கிராயுதத்தால் அடிபட்டு விழும்போது

दैवमेव परं मन्ये पौरुषंतु निरर्थकम् ।

தெய்வகெதியே மேலானது. விஞ்ஞான சாமர்த்தியம் பிரயோஜனமற்றது என்று ஸர்வேசுவரனைத் தியானித்ததால் ஸாயுஜ்யத்தை

அடைந்ததாகவும் ஸ்ரீமத்பாகவதத்தில் கூறியிருப்பதாகக் கேள்வி பட்டிருக்கிறேன்.

நம்முடைய உத்தேசப்படிக்குக் கிரந்தத்தை ஊன்றிப்பார்க்கும்போது ஸ்ரீமத் ராமாயணம் எழுதிசுமார் எட்டுலக்ஷம் வருஷத்திற்குமேல் இருக்கலாமென்று தோன்றுகிறது. சிலர் இன்னும் அதிககாலத்தை உத்தேசித்திருப்பதாய்த் தெரிகிறது. ஸ்ரீமத் ராமாயணத்தை இயற்றிய ஸ்ரீவால்மீகிரிஷி தன்னுடைய நிலைமையையொளிக்காமல் சொல்லியிருப்பதுடன் அந்தகாலத்திலேயே பட்டண நிர்மாணம், கோட்டையின் வன்மை, பீரங்கிசப்தபேதி' முதலிய ஆயுதங்களின் உபயோகம், படிப்பு, ராஜநீதி, பதிவ்ருதா மாஹாத்மியம, ஆடையாபரணங்களின் வர்ணனை, வர்ணாசிரம தர்மம், இன்னும் எண்ணிறந்த விஷயங்களையும் தான் நேரில் பார்த்து அனுபவித்ததுபோல் எழுதியிருக்கிறார், மனுதர்ம சாஸ்திரத்தைப்பற்றியும் கூறியிருக்கிறார். உண்மை எப்படியிருந்தாலும் சரித்திரகாலத்துக்கு மேம்பட்டதும் மிகப் பழமையானது என்பதற்கும் சந்தேகமே கிடையாது. பூமண்டலத்திலுள்ள சகல ஜனங்களுக்கும் தெரிந்து இந்தியா பூராவும் அர்ச்சாரூபமாக ஆலயங்களில் பூஜிக்கப்பட்டும், புஸ்தகரூபமாகப் பிரதிகிராமங்களிலும் படித்தும் போற்றப்பட்டும் வருவதுமே சிறந்த சாக்ஷியல்லவா சிறந்த தமிழ்கவி சேகரமான கம்பர்ராமாயணத்தை மொழிபெயர்த்திருப்பது உலகத்துக்குத்தெரியாதா. அவர் யார் என்பது இவர்களுக்குத் தெரியாதுபோலும். வைதிகப்பிரஷ்டரான ஒருசார்பார் ஹிந்துவென்று தன்னைச்சொல்லிக்கொண்டு மகத்தானகிரந்தத்தை அபத்தமென்றும், கல்பிதமென்றும் எழுதுவதால் மகிமை வாய்ந்த கிரந்தத்துக்கு என்னகுறை உண்டாகப்போகிறது. பசும் பொன்னானது அடிபடுவது ஒளிபெறுவதற்கேயல்லவா. வைதிக மதம் என்பது வேதத்தில் சொல்லியிருக்கும் தங்கள் தங்கள் வர்ணாசிரமத்துக்குரியகன்மங்களை அனுஸரிக்கும் பிராம்மணர்கள் முதல் சண்டாளர்கள்வரையில்உள்ளசகலருக்கும் பொதுவானது. வேதபாஹ்யாளானவர்கள் நம்முடைய மதத்தையும் மதகிரந்தங்களையும் தூஷித்துவருவது ஸகஜமேயாகும். அவர்களைப்பற்றி நாம் கவனிக்கவேண்டியஅவசியமேகிடையாது. ஆகையால் தூர்த்தர்களின் மாயவலையில் சிக்குண்டு மயங்காமல் ஸகல ஆஸ்திக வைதிகமதஸ்தர்களும் மகா புனிதமான ஸ்ரீமத் ராமாயண கிரந்தத்தைப் படித்தும்பூஜித்தும்வருமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

சுபம். தி. ந. தாததேசிகாசாரியார்.

மனுஸ்மிருதி அத்தியாயம். 2
சில வசனங்கள்.

1. வேதப்படிப்பின் ஆரம்பத்திலும் முடிவிலும் சிஷ்யன் குருவை நமஸ்கரிக்கவேண்டியது. கைகளைக் கட்டிக்கொண்டு (வணக்கத்துடன்) படிக்கவேண்டியது.

2. படிப்பின் ஆரம்பத்தில் குரு சிஷ்யனைப்பார்த்து படி யென்று தவருமல் சொல்லவேண்டும். அவர் நிறுத்து, என்று சொல்லும்பொழுது சிஷ்யன் நிறுத்தவேண்டியது.

3. வேதாத்யயன ஆரம்பத்திலும், முடிவிலும் சிஷ்யன் 'ஓம்' சப்தத்தை (பிரணவத்தை) தவருது உச்சரிக்கவேண்டும். ஆரம்பத்தில் பிரணவத்தை உச்சரிக்கத் தவறினல் படிப்பு அவனை விட்டு நழுவும் (படிப்பு செம்மையாய் நிறைவேருது.) முடிவில் உச்சரிக்கத் தவறினல் ஏறினபடிப்பும் மறந்துபோய் பிரயோஜனப்படாது.

4. பிரம்மா ஓம் என்கிற பிரணவத்தின் முதல் எழுத்தாகிய அகாரத்தை ரிக்வேதத்திலிருந்தும் இரண்டாம் எழுத்தாகிய உகாரத்தை யஜுர்வேதத்திலிருந்தும் மூன்றும் எழுத்தாகிய மகாரத்தை ஸாமவேதத்திலிருந்தும் கடைந்து எடுத்தார். தயிரிலிருந்து வெண்ணையைப்போல் வேதங்களிலிருந்து "ஓம்" என்கிறசாரத்தை எடுத்திருக்கிறர். அம்மாதிரியே பூ:, புவ:, ஸ்வ:, என்கிற (வ்யாஹிருதி) சப்தங்களும் முறையே ரிக் யஜுஸ் ஸாம வேதங்களிலிருந்து ஸாரமாக எடுக்கப்பட்டிருக்கின்றன.

5. இந்த பிரணவம், வியாஹிருதி, முன்னிட்ட காயத்ரீ மந்திரத்தை காலையிலும், மாலையிலும், ஜபிக்கிறவன் மூன்று வேதப்படிப்பின் பிரயோஜனத்தையும் அடைகிறன். (காயத்ரீ ஜபம் அவச்யம் செய்யப்படவேண்டும்)

6. மேற்சொல்லிய பிரணவ, வ்யாஹிருதி, காயத்ரீ இம் மூன்று சேர்ந்த மந்திரத்தை ஆயிரந்தடவை ஸந்தியாகாலம் தவருக்கூட, சரியான நதி தீர முதலான இடத்தில் இருந்து ஜபிக்கிற

வன் பாம்பு சட்டையை உரிப்பதுபோல எந்த மகாபாபத்திலிருந்தும் ஒருமாஸ காலத்திற்குள் விடப்படுகிறான்.

7. சரியான காலத்தில் காயத்ரீ ஜபம் செய்யாமலும் ஹோமம் முதலான கர்மங்கள் செய்யாமலுமிருக்கிற த்விஜன் ஸாதுக்களால் தள்ளப்படுகிறான்.

8. ஓம்காரத்தை முன்னிட்ட மூன்று மஹா வ்யாஹிருதி மூன்று பாதமடங்கிய காயத்திரீ மந்திரம் இவை குறைவற்ற பலனைக் கொடுத்து பிரம்மபதத்தையும் அடைவிக்கும்.

9. தினந்தோறும் ஓம்காரவ்யாஹிருதிகாயத்ரீமந்திரத்தை தச் சோம்பலில்லாமல் மூன்று வருஷம் ஜபிக்கிறவன் காற்றைப்போல் எங்கும் சஞ்சரித்து சரீரமற்று பரபிரம்மத்தோடு சேருகிறான்.

10. ஓம் மந்திரம் பரபிரம்மம் என்றும் பிராணாயாமம் பெரிய தவமென்றும் காயத்ரியைக்காட்டிலும் பெரிது இல்லையென்றும் மௌனத்தைக்காட்டிலும் நிஜம்பேசுவது மேலானது என்றும் சொல்லப்படுகிறது.

R. ஸ்வாமிநாதய்யர்.

புராணவிமர்சம், மனிதனின் கடமை.

பூமியானது சகல ஜீவராசிகளுக்கும் ஆதாரமானது, அப்பூமியினின்றும் தன் வளர்ச்சிக்கும் பிரயோஜனத்திற்கும் அநுகூலமாயிருக்கிற உணவுப் பொருள்களை மட்டும் அப்பூமியினின்றும் பிரித்தெடுத்து உட்கொண்டுதன்னிடம்வருவோர்களுக்குகுளிர்ந்த நிழலையளித்து ஸகல பிராணி வர்க்கங்களுடைய பசி, தாகங்களையும் தீர்க்கத்தக்கதான காய், கனி, முதலிய ஆகாரப்பொருளை ஈன்று தனது ஒவ்வொரு அவயவத்தினாலும் செய்யத்தக்க சகல உபகாரங்களையும் உலகத்திற்குக் கொடுத்து தான் விருக்ஷ ஜன்மமெடுத்ததின் பிரயோஜனத்தையும் விருக்ஷங்கள் அடைந்து விடுகின்றன. ஆனால் அம்மாத்திரத்தினின்றும் எவ்வளவோ உயர்ந்த

நிலைமையில் வந்துசேர்ந்து பகுத்தறிவையும் பெற்றுள்ள மனிதன்
உலகப்பொருள்களில் நன்மை, தீமைகளை பகுத்துணர்ந்து தேகத்
திற்கு நன்மையளிக்கும் உணவுகளையும் மனிதனின் பரிசுத்த
எண்ணங்களுக்குவேண்டிய நன்மைகளையும் ஆத்மாவுக்கு இன்றி
யமையாத ஞான சாதனங்களையும், முறையே எடுத்து உட்
கொண்டு அவற்றால் புஷ்டியை அடைந்து உண்மையான மனிதத்
தன்மையின் பூர்ணவளர்ச்சியைப்பெற்று கிருதார்த்தனாகி உலகத்
தினது நன்மைக்கும், வளர்ச்சிக்கும் தேவையான சகல உதவி
களையும் சகல அங்கங்களைக்கொண்டும் செய்து மனித
ஜென்மத்தின் கடமையை நிறைவேற்றாமல் விரோதமாய் தேகம்
மனது, ஆத்மா, இம்மூன்றினுடைய வளர்ச்சிக்கும் பொருந்
தாத பொருள்களை உட்கொண்டு அம்மூன்றுகளையும் பிணிவாய்ப்
படச்செய்து, தனக்கும் பிறர்க்கும் உபயோகமற்று அதோகதி
யில் செல்லுவதைக் காணும்தோறும் நமக்கு இப்பாமர ஜன்மங்
களை எடுப்பதைக்காட்டிலும் அந்த விருட்ச ஜன்மங்கள் எடுப்
பதே மேலெனச் சொல்லவேண்டுமெனத் தோற்றுகிறது. மனி
தர்கள் அறிவால் தர்மத்தையறிந்து அதன்படி நடந்து மேன்
மைபெறவேண்டும். தற்காலத்தில் தர்மமார்க்கம் உள்ளபடி அறி
யப்படாமையால் பிராணிகள் பல கஷ்டமடைகிறார்கள். இவர்
களின் கண்ணுக்கு சகல வஸ்துக்களும் இயற்கைக்கு விரோத
மாகவே தென்படுகின்றன. 'மஞ்சக்காமாலை ரோகிக்கு' தான்
பார்க்கும் உலகவஸ்துக்கள் யாவும் மஞ்சளாகவே காணப்படுவது
ஸகஜம். இதன் காரணமறியாமல் உலகவஸ்துக்கள் இயற்கைக்கு
விரோதமாகவிருப்பதென்று அவைகளை மாற்ற முயற்சிப்பது
மூடத்தனமாகும் என்பதுபோல அவிவேகிகள் தங்களது அறி
யாமையின் முயற்சியின் காரணமாக பெரியோர்களின் மீது
எல்லாக் குற்றங்களையும் சுமத்தியும் பலவாறு நிந்தித்தும், அவை
களை நீக்கிவைக்கவேண்டுமென்றும், உபதேசித்தும்வருகிறார்கள்.

இவர்கள் தங்களிடமுள்ள பெரும் குற்றத்தை விலக்கிக்
கொள்ள முயற்சிக்காமல் மகான்களின்மேல் பற்பல குற்றங்
களைக் கற்பித்து அவற்றை மலைபோல பிரமாதமாக்கி வீணே
அவர்களைத் தூற்றி வருகிறார்கள். இம்மாதிரியுள்ளவர்களை 'பர்த்
திருஹரி' என்ற மகான் ते के न जानीमहे 'அவர்கள் யாரோயாமறி

யோம்' என்றார். இம்மனிதர்களின் முயற்சியானது அடிக்கடி வீணாவது சகஜம். இவர்களின் முயற்சியில் சிறிதளவாவது தர்மம் சேராமலிருப்பதே இதற்குக் காரணமாம். ஒருபடி உப்பை இரண்டுபடி நல்ல ஜலத்தில் கலக்கினால் அது ஒன்றுக்கும் உதவாமல் உப்பு நீராகிவிடும். அந்தத் தண்ணீர் தாகத்தையும் தணிக்க மாட்டாது. ஆனால் இந்த ஒருபடி உப்பை ஒருபெரிய குளத்தில் கலக்கிவிட்டால் அக்குளத்து ஜலத்தை உப்பு நீராக்க அதற்கு சக்தியில்லை. அது தாகத்திற்கும் உதவாமல் போவதுமில்லை என்பது போல வஞ்சனையான உபதேசங்கள் யாவும் அற்ப அறிவுள்ளவர்களை மட்டிலும் கலங்கச்செய்யுமேதவிர பேறறிவைப் பெற்ற மேதாவிகளை ஒருபோதும் கலங்கச்செய்யமாட்டாதென்பது நிச்சயம்.

ஒன்று என்ற எண்ணுக்குப்பின் பல பூஜ்ஜியங்களைக் கூட்டினால் பெரும் தொகைகளாக்கிக் கொள்ளலாம். ஆனால் ஒன்று என்ற எண்ணை எடுத்துவிட்டால் பூஜ்ஜியங்கள் எத்தனை சேர்ந்தாலும் தொகைவராமாட்டாது. அதற்கு யாதொரு மதிப்புமில்லை. அதுபோலவே தர்மத்தை முன்வைத்துச் செய்யும பல கிரியைகளும் உபதேசங்களும் அபரிமிதமஹிமைபெறும். தர்மத்தை விட்டுச்செய்யும் பல பிரயத்தினங்களும், உபதேசங்களும் யாதொரு மஹிமையையும் உபயோகத்தையும் பெறமாட்டாதென்பது உண்மை. தர்ம வசனம் அதை அநுசரித்த முயற்சி இவைகளுக்கு மதிப்பே தவிற வெறும்பேச்சு, முயற்சி, இவைகளுக்கு யாதொரு மதிப்புமில்லை. இது நமது அனுபவத்தில் அடிக்கடிப் பார்க்கக் கூடியதே.

தற்காலத்தில் ஸ்வராஜ்ஜியபிராப்திக்காக பலகோடிஜனங்கள் தவிக்கிறார்கள், முயற்சிக்கிறார்கள், உபதேசிக்கிறார்கள். ஆனால் எதிர்பார்த்திருந்த பல சமயங்களும் சென்றுவிட்டன. ஏன் இன்னும் காரியம் கைகூடவில்லை என்று புத்திமான்கள் சற்று நிதானமாகச் சிந்தித்தால் நன்குவிளங்கும். ஸ்வராஜ்ஜியத்தில் ஆவல், முயற்சி, உபதேசங்கள், இவைகள் யாவும் பூஜ்ஜியத்திற்கு ஒப்பாகுமே தவிற எண்களுக்கு ஒப்பாகமாட்டாது. இதில் தர்ம மார்க்கமாக முயற்சி ஒன்றே எண்களுக்கொப்பாகும். இப்போது அந்த எண்ணாகிய தர்மம் ஸ்வராஜ்ஜிய முயற்சியின்முன் சேற்கப்

படவில்லை. அதனால்தான் வெறும் முயற்சியாகவே நிற்கிறது. அதனால் பலதேச கஷ்டங்களுக்குக் காரணமாக வந்திருக்கிறது என்பதை அறியாதாரில்லை. ஸ்வராஜ்ஜியம் வருவதிற்குள்ளாகவே 'தர்மஸேது'வானது தகர்க்கப்பட்டு பலபாகங்கள் சேதமடைந்து வருகிறது. தெய்வம். தேவாலயம், சுத்தம், அசுத்தம், ஆசாரம், இவைகள் ஒழியவேணும், ருதுமதீ விவாஹம், விதவாவிவாஹம் மிச்ரபோஜனம், இவைகள் விளங்கவேணும். ஆஸ்திக்யம், சாஸ்திரவிசுவாசமாகிய குருட்டு நம்பிக்கை இவைகள் நசிக்க வேணுமென்று வேண்டிக்கொள்கிறார்கள். இவைகள் தற்காலத்தில் ஸ்வராஜ்ஜியத்தின் அஸ்திவாரமாக இருப்பதால் இதற்குமேல் வைக்கப்பட்டிருக்கும் ஸ்வராஜ்ஜிய முயற்சியானது பயன்படாமல் இருக்கிறது. இதில் தர்மம்மாத்திரம் சேர்ந்துவிட்டால் இதற்குள் ஸ்வராஜ்ஜியம் நம் கைவந்திருக்குமென்பதில் சந்தேகமில்லை. இதில் இன்னும் சற்று உள்ளில்சென்று யோஜிப்போமானால் இம்மாதிரியான அதர்மத்தின் ஆதிக்கமாகவே ஸ்வராஜ்ஜியம் நம் கையில் வந்துவிட்டால் தர்மம் எங்குபோகும், அதற்கிடமெங்கே, இவ் விஷயத்தில் பகவானுக்கு ஏன் கவலையிருக்கமாட்டாது.

धर्मसंस्थापनार्थाय सम्भवामि युगे युगे ।

''தர்மஸ்தாபனத்திற்காக நான் யுகந்தோறும் அவதரிக்கிறேன்'' என்றல்லவோ பகவான் உறுதிசெய்திருக்கிறார். சத்திய ஸங்கல்ப்பனான பகவான் தனதுவாக்கைக் காப்பாற்ற ஏன் முன்நிற்க மாட்டார்.

மகிமையற்ற நம்போன்ற மனிதர்களும் தான்கொண்ட எண்ணத்தைச் சிறிதும் மாற்ற மனங்கொள்ளாமல் எவ்வழியாகவாவது நாம்நினைத்தபடி சுயராஜ்ஜியம் பெற்றுவிடவேணுமென்று சாகஸம்செய்துவரும்போது மகாமஹிமைவாய்ந்த பகவானுக்குத் தனது சங்கல்ப்பத்தை (தர்மரட்சணத்தை) பூர்த்திசெய்ய ஏன் ஆவல் எழமாட்டாது. தர்மத்தை ரட்சிப்பதும் ஸ்தாபிப்பதும் தான் அவருக்கு ஒரு பெரிய கஷ்டமா? இவ் விஷயத்தில் பகவத் சங்கல்ப்பந்தான் என்னவென்று சற்று ஆலோசிக்குமளவில் தர்மமார்க்கம்மேன்மையாக விளங்கவேணுமென்பதுதான். அம் மார்க்கத்தில் கஷ்டமென்பது கிடையாது. குறித்தகாலத்தில் அவ்வழியாக தப்பாமல் பலனையடைந்துவிடலாம். இம் மார்க்கமாகவே அருந்தவம்செய்த மகான்கள் தங்கள் இஷ்டபூர்த்தியைப்

பூர்ணமாகப்பெற்று விளங்கினர்கள். பகவத் சங்கல்பத்திற்கு நேர்விரோதமாக ஒரு பெரும்காரியத்தைச் செய்ய நாம் முயற்சித்துவருவதால் அதில் பல கஷ்டம், மனோவியாகூலம், கவலை பயம் இவைகள் உண்டாகின்றன. அதர்மம், காரிய விக்கினத்தைச் செய்யும் என்பது ஈசனது நியமசாஸனமாம்,

துரியோதனன் அதர்மத்துடனும், பிடிவாதகுணத்துடனும், பெரியோர்களின் ஆசார உபதேசங்களை அனுசரியாமல் தனது காரியம் கைகூடுவதற்காகச் சாதுக்களான பாண்டவர்களைப் பல தடவை அழிக்கமுயற்சித்தும், நியாயமாகச் சமாதானம்செய்த விதுரர், ஸ்ரீகிருஷ்ணன் முதலிய மகான்களின் உபதேசங்களை உதறித்தள்ளியும், தயாதாட்சிண்ணியமற்ற செய்கையுடனும், எவ்வளவோ பந்தோபஸ்தாகவும், புத்திசக்தியாகவும், அதிரதர்களான மகான்களைக்கொண்டு மஹாயுத்தம்செய்தும், அவனுக்குக் கடைசியாக சர்வமும் நஷ்டமாகவே முடிந்தது. இதற்கு நேர் மாருக பாண்டவர்கள் ''தர்மம் தலைகாக்கும்'' என்று நம்பிக்கையுடன் பல கஷ்டங்களையும் கைக்கொண்டும் ஈசனிடம் சகலபாரத்தையும் வைத்து அஸஹ்யமான கஷ்டகாலத்திலும் சத்தியம், தர்மம், இவைகளை விடாமல் பரிபாலித்தும் மகான்களின் உபதேசத்தை அனுசரித்தும், சாமான்னிய பலத்துடனும் நின்று யுத்தம்செய்துவந்தார்கள். இவர்கள் சென்ற வழி யாவும் ஈசன் அருள்பொருந்தி விளங்கினதாலும், ஜெயம்பெற்று சுகமடைந்தார்கள். இந்த பாண்டவ, கௌரவ, யுத்தத்தில் தர்மத்தால் பகவதனுக்கிரகம்பெற்று பாண்டவர்கள் ஜயம்பெற்ருர்களேதவிர கேவலமான சரீரபலம், புத்திசாமர்த்தியம் இவைகளால்மட்டும் ஜயம்பெறவில்லை என்பது "பள்ளிப்பிள்ளைகளும்" அறிந்தவிஷயம் என்ருல் இதைவிட வேறு உதாரணம் இந்துக்களுக்குத் தேவை இல்லை. நமது தற்கால ஸ்வராஜ்ஜியப்போராட்டமானது "பாரத யுத்தத்திற்கு" ஒப்பாக ஒருவாறு சொல்லலாம். பாரதயுத்தம் தர்மத்தில் நிலைபெற்றது. அதனுல் ஜெயமும்வந்தது. அதர்மம் அபாயமானது. அழிவைச் செய்யக்கூடியது எவ்வாறெனில்—

अधर्मो हिंसिकारूपो धर्मस्तु सुखरूपकः ।

अधर्मात् दुःखमाप्नोति धर्माद्वै सुखमेधते ।

विद्यात्दुर्वृत्तितो दुःखं सुखं विद्यात् सुवृत्तितः ॥

"அதர்மம் ஹிம்சாரூபமானது. தர்ம்ம்சுகரூபமானது. அதர்மத்தால் துக்கமும், தர்மத்தால் சுகமும் உண்டாகிறது. துராசாரத்தால் துக்கமும், சதாசாரத்தால் சுகமும், வருகிறது" என்று தெய்வ ஆக்ஞைபிறந்திருப்பதால் பகுத்தறிவைப்பெற்ற மனிதன் சுகரூபமான தர்மத்தையே ஆசரித்து சுகம்பெறவேணும். உபநிஷத்தும் "தர்மத்தினின்றும்விலகாதே" என்று உபதேசிக்கிறது. இம்மாதிரியான நியாயவசனங்களால் சுகத்தைக்கருதி தர்ம்ம மார்க்கப் பிரவிருத்தியே செய்துவரவேண்டுமென்றும் ஒருவன் முயற்சிக்கும் காரியங்களின் மத்தியில் நினைத்திராத பல தடைகளும், அதனால் காரிய விக்கினமும் வருமானால் அப்போது அவனது பிரவிர்த்தி தர்ம்மவிருத்தமென்று அறிந்துகொள்ள வேண்டுமென்பதும், விதியின் கருத்து. நாம் காரிய ஜயத்தை விரும்பி முயற்சித்தால் தர்ம்ம மார்க்கத்தையே பாண்டவர்களைப் போல கடைப்பிடித்துவரவேண்டும். அதர்மத்தில் அல்ப்பமும் ஆசைவரக்கூடாது. அதர்ம்மம் முயற்சியில் சேர்ந்துவிட்டால் ஆபத்தாய்முடிந்துவிடும். ஆகையால் தர்மரூபியான பகவானை சாட்சியாகவைத்து அவரது சட்ட நியமங்களான வேதசாஸ்திர புராணங்களை நம்பிக்கையுடன் நாடி முயற்சித்துவந்தோமானால் தர்ம்மத்தின் மகிமையால் முயற்சியின் பயனை முக்கியமாக அடைந்துவிடலாம்.

சுபம்.

K. S. சங்கரராமசர்மா.

ஸோமயாகம்.

இப்பூவுலகின்கண் விளங்காநிற்கும் பஞ்சபூத லிங்கங்களுள் ஒன்றான அப்புலிங்கமூர்த்தி எழுந்தருளியிருக்கும் திரு ஆனைக்கா வென்னும் ஜம்புகேசுவர க்ஷேத்திரத்தில் நவதீர்த்தங்களில் ஒன்றாகியும் பிரும்மா தவம்புரிந்த ஸ்தானமாயுமுள்ள பிரும்மதீர்த்த மென்னும் குளக்கரையில் தற்காலம் ஜ்யோதிர்மயமான (எலக்டிரிக்) விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு விஸ்தாரமாக அமைக்கப்பெற்ற கொட்டகையில் ஆங்கரை ப்ரம்மஸ்ரீ கைலாஸநாத வாஜ

பேயயாஜீ அவர்கள் ஸகோதாரும் தற்காலம் திருவானைக்காவலில் வஸித்துவருபவருமான ப்ரம்மஸ்ரீ சிவராமகிருஷ்ண தீக்ஷிதாவர்கள் சென்ற மாசிமீ 23உ ஞாயிற்றுக்கிழமைமுதல் 28உ முடிய அக்னிஷ்டோமமென்னும் ஸோமயாகத்தைச் செய்துமுடித்தார்கள். அம்மஹா யாகத்திற்கு இவ்வூர்மஹாஜனங்கள் அனைவரும் தங்களாலியன்ற உதவியை திரவியத்தாலும் சரீரத்தாலும்புரிந்து ஷையாகத்தை அதிவிமரிசையாய் நடத்திவைத்தனர். ஒவ்வொரு தினமும் ஆயிரக்கணக்கான பிராமணர்களுக்கு போஜனம் அளிக்கப்பட்டது.

பிரதிதினம் மாலை அநேக பண்டிதரத்னங்கள் அரியவிஷயங்களை உபன்யஸித்தனர். அப்பண்டிதர்களுள் சிதம்பரம் வேத சாஸ்திர வித்யாசாலை தலைமை பண்டிதரும் பண்டித ரத்னமும் மீமாம்ஸா லக்ஷணவித்வானுமான ப்ரம்மஸ்ரீ எம்.என். ராகவசாஸ்திரிகள் அவர்களாலும், திருவானைக்காவல் ஸ்ரீ ஜகத்குருசங்கராசார்ய சுவாமிகளவர்கள் வித்யாஸ்தானம் பிரின்ஸிபால் வேதாந்த திலகம் போலகம் ப்ரம்மஸ்ரீ ஸ்ரீராமசாஸ்திரிகள் அவர்களாலும் முறையே 25, 26 தேதிகளில் "கர்மானுஷ்டானம் ஆவச்யகம்" "வேதம் ஸ்வதந்த்ர பிரமாணம்" என்னும் விஷயங்கள் உபன்யஸிக்கப்பட்டன. அச்சமயங்களில் சிலர் யாகம்செய்வது தவறு என்றும் பிஷ்டபசுவால் யாகம் செய்வதுதான் உசிதமென்றும் இன்னும் அநேக நாஸ்திக கேள்விகளை முப்பதுக்குக் குறையாமல் நேரிலும் கடித மூலமாயும் கேட்டனர். அக்கேள்விகளுக்கு ஷை இரண்டு பண்டிதரத்னங்களும் சுருதி ஸ்மிருதி யுக்திமுதலிய அநேக பிரமாணங்களை மேற்கோளாகக்கொண்டு உடனுக்குடன் சரியானபடி தெளிவாக பதில் சொல்லி சபையிலுள்ள சிறு குழந்தைகளுமறியும்படி எளிய நடையில் உபன்யஸித்தார்கள்.

அங்கு வந்திருந்தோர்களெல்லோரும் அவ்வுபன்யாஸங்களைக்கேட்டும் அங்கு நடந்த ஸ்தோத்ர சஸ்த்ராதிகளைக் கேட்டும் தரிசித்தும் ஆனந்தமடைந்து "தர்மங்கள் நசித்துவருமிக்கலியிலும் இவ்வளவு ஆஸ்திக புத்தியும் வைதிகதர்மத்தில் சிரத்தையுமுள்ள பண்டிதரத்னங்களால் நிறைந்த பெரிய யாகசாலையையும் இப்புனித கர்மாவையும் தரிசித்த தங்களுடைய நேத்திரங்கள் இப்பொழுதுதான் ஸபலமாயிற்றென்றும் சிலாகித்தும்

கொண்டும் யக்ஞேசுவாருடைய பிரசாதம்பெற்று தத்தம் இல்லத்திற்குச் சென்றனர்.

வாசகர்களே! ஸநாதன தர்மாபிமானிகளே! நம்முடைய நாடு நகரங்களெல்லாம் சுபிக்ஷமடைந்து பிராணிகளெல்லாம் சுகமாக வாழ்வதற்கும் நமக்கு ஸ்வாராஜ்யம் ஸித்திப்பதற்கும் அவரவர்களுடைய ஸ்வதர்மானுஷ்டானமே காரணம். ஆகையினால் ஸநாதந தர்மாபிமானிகள் அனைவரும் வேதமாதாவினால் உபதேசிக்கப்பட்ட இதைப்போன்ற புனித கர்மாக்களைச் செய்து க்ஷேமத்தை அடையவேண்டும். அப்படி அனுஷ்டிக்க இயலாதவர்கள் அனுஷ்டிப்பவர்களைத் தூஷிக்காமலும் வேதத்தைநிந்திக்காமலும் தங்களாலியன்ற தர்மகாரியங்களைச்செய்யவேண்டும்.

அப்படி செய்தால் நமக்கும்நம்தேசத்திற்கும் க்ஷேமம் உண்டாகும்படி பரமேசுவரன் ரக்ஷித்தருளுவார்.

R. சுப்பிரமணிய சர்மா

நவீன ஆடம்பரம்.

மனிதர்களுடைய வாழ்க்கையின் நோக்கம் எப்பொழுதும் உண்டு உடுத்து உறங்கிக்கழித்தலில் இல்லையென்பது ஸர்வசாஸ்த்ரார்த்த ஸித்தாந்தம். மேலும் மனிதர்கள் காரணகார்ய உணர்ச்சி ஒன்றினாலே மட்டும் பசு பக்ஷிகளைக் காட்டிலும் மேம்பட்டவர்கள். அதனாலேயே இகலோக சுகத்துடன் நில்லாது பரலோக சுகத்தையும் நாடி அடையும் யோக்கியதை உள்ளவர்கள். அப்படிக்கில்லாதவர்கள் கேவலம் மிருகத்துக்கு ஒப்பானவர்களே. இதையே பெரியோர்கள்—

अपि मानुष्यकं लब्ध्वा भवन्ति ज्ञानिनो न ये ।
पशुतैव वरं तेषां प्रत्यवायाप्रवर्तनादिति ॥

என்று தெரிவித்திருக்கிறார்கள். தற்காலத்தில் மக்கள் எவ்வாழ்க்கையை மேற்கொண்டிருக்கின்றனர் என்பதை ஆராய்வோம்.

தற்காலத்தில் எங்கு பார்த்தாலும் "நாகரீகம் நாகரீகம்" என்று சொல்லப்பட்டுவருகிறது. அதன் அர்த்தம் தற்காலத்தியவரால் உண்பதில் ஆடம்பரம், உடுப்பதில் ஆடம்பரம், க்ஷவரத்தில் ஆடம்பரம் நடையில் ஆடம்பரம் என்று

என்பதுபோல் सर्व आडंबरमयं जगत् என்று ஏற்படும்படிசெய்து விட்டது.

"உடுக்கக்கோவணமுண்டு, உறங்கத்திண்ணையுண்டு" "உண்பதுநாழி, உடுப்பது நான்குமுழம்" என்பதான பட்டிணத்தார், ஔவையார்முதலியவர்களுடைய பழமொழிகளெல்லாம் ஆகாசத்தில் பறந்துவிட்டன.

வாஸ்தவத்தில் நாகரீக சப்தத்திற்கு எளியோர்களிடத்தில் தயாதாக்ஷிண்யம், முன்னோர்கள் அனுஸரித்துவந்த விதியை அனுஸரித்தல் முதலானதுதான் அர்த்தம். இதற்கு மாருக தற்காலத்தில் நவீன ஆடம்பரமோகமானது பேராசை, பொருமை, முதலிய துர்க்குணங்களை எல்லாம் மேன்மேலும் வளர்த்து வருகின்றது. இந்த ஆடம்பர வாழ்க்கையினுல் எவ்வளவோ குடும்பங்கள் தலைகீழாய்க் கவிழ்ந்திருப்பது நமது நேயர்களுக்குத் தெரிந்த விஷயமே. மேற்கூறிய எல்லாவற்றிற்கும் ஒரே ஒரு காரணந்தான் உண்டு. (அதாவது) மேனுட்டு நாகரீகமானது நமது பாரதநாட்டில் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருக்கிறது. மேனுட்டாரிடத்தில் நாம் அறியவேண்டிய விஷயங்கள் பல இருக்க அதைவிடுத்து அவர்களுடையவெளி ஆடம்பரங்களிலும், வேஷங்களிலுமே கருத்தைச் செலுத்துகிறேம். மேலும் நாகரீகம் என்கிற ஸுரையானது நம்மால் புருஷர்களுக்குத்தான் மோகத்தை உண்டுபண்ணிற்று என்று சொல்வதற்கில்லாமல் பெண்களையும் பிடித்து மயக்கிவிட்டது. மேலும் நமது தாய்மார்களான உத்தம ஸ்திரீ ரத்னங்களில் பலர்க்கு மேனுட்டாரின் படிப்பின் பயனுக இங்லீஷ் டான்ஸ், ஸ்திரீ ஸ்வாதந்திரியம் முதலியவைகள் வந்திருக்கின்றன. இதையும் பெற்றோர்கள் கண்காணித்து ஆனந்தத்தாண்டவமாடுகின்றனர். இன்னும் இதைவிவரிப்பின் வளரும் இதை யார் யாருக்கு எடுத்துக்காட்டுவது. கலியின் ப்ரவாஹம்தான் என்னமகிமை பொருந்தியதாய் இருக்கிறது. நிற்க, எந்த காலத்தில் ஆடம்பாவாழ்க்கையில் மோகம் குறைகிறதோ அப்பொழுதுதான் உலகம் க்ஷேமத்தை அடைந்து இன்புறும்.

மேலும் மனிதர்களின் சரீரத்தைத்தின்றுவரும்பிணிக்கூட்டத்திற்கும், துன்பப்பெருக்கிற்கும் இகலோக வாழ்வில் சுகத்தைக்

கெடுத்துவரும் பேராசை, பொறுமை துர்குணங்கட்கும் மூலகார மானது ஆடம்பரவாழ்க்கையேயன்றி வேறல்ல. ஆகையால் ஸகோதர ஸகோதரிகள் எல்லாரும் ஆடம்பர நாகரீகமோகத்தை தக்ஷணமே வெறுத்து உதரித்தள்ளுவார்களாக.

மேனுடுகளில் "ஆடம்பர வாழ்க்கையானது" "நிர்வாண சங்கம்" முதலியதால் அறவே வெறுக்கப்பட்டு வருகிறது என்பது நமது நேயர்கள் பத்திரிகை வாயிலாக தெரிந்துகொண்டிருப்பார்கள். ஆயினும் நம் நாட்டிலோ நாளுக்குநாள் "நவீன நாகரீகங்களே" விருத்தியடைந்து வருகின்றன. உதாஹரணமாக— கிருப்புகளில் எத்தனைவிதம், மீசைகளில் எத்தனைவிதம் ஒவ்வொன்றுக்கும் பேர்கூட இருந்துவருகிறது. நவீன ஆடம்பரத்தினுடைய ப்ரபாவத்தைத்தான் என்னென்றுசொல்வது. இந்த ஆடம்பர வாழ்க்கையானது பெரும்பாலும் பிறர் நலத்தைப்பேண விடுவதில்லை. தன்சுகத்தைத்தான்தேடும். அதோடுமட்டும் நிற்காமல் பிறருக்கு துக்கத்தையுமுண்டுபண்ணும். பிறர்நலத்தைக் கோறுவதுதான் பரமோத்தமமென்று நமது பெரியோர்கள்

परोपकारः पुण्याय पापाय परपीडनम् ।
श्लोकार्धेन प्रवक्ष्यामि यदुक्तं ग्रंथकोटिभिः ॥ इति ।

என்று தெரிவித்திருக்கிறார்கள்.

நமது சாஸ்திரங்கள் இந்திரிய நிக்ரஹத்தையே பெரிதும் வற்புறுத்திச்சொல்கின்றன. நவீன நாகரீகத்தினால் மனதுக்குத் தோன்றினபடி இந்திரியங்களையே த்ருப்தி செய்ய விரும்புவதானது ஆத்மஹத்திசெய்து கொள்ளவதற்கொப்பாகும்.

ஆகையால் இதைக் கண்ணுறும் நேயர்கள், பெரும்பான்மையான ஜனங்கள் தரித்ரத்தால் வாடுதற்கும், வியாதியின் தோற்றத்திற்கும், முக்யகாரணமாய் விளங்கும் ஆடம்பரங்களை விட்டுவிட்டு, ஆத்மகுணங்களையே பெரும்பாலும் விருத்திசெய்யும் நடையை அனுஸரிப்பார்கள் என்பது திண்ணம்.

நவீன நாகரீக நடவடிக்கைகளே எப்பொழுதும் டாக்டர்களை நாடச்செய்யவும், மருந்துகளாலும், சஸ்திர சிகித்ஸைகளாலும் சுகவாழ்வு எய்தல், மிக்க கஷ்டமென்று நாளுக்கு நாள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவுற்று வருகிறது. ப்ராசீன ஒழுக்கம் ஒன்றுதான் சுகவாழ்வுக்கு முக்யகாரணம்.

நமது முன்னோர்கள் ஸனாதன தர்மத்தை மேற்கொண்டிருந்தமையால் ஆரோக்யசாலிகளாய் நூறாண்டளவும் சுகமாகவாழ்ந்து வந்தனர்.

தற்காலம் அவ்விதமாறுபாடுக்கு முக்யகாரணம்மேனாட்டுஆடம்பர நாகரீகமோகம் என்பதில் கொஞ்சமேனும் சந்தேஹமுண்டோ

ஆகையால் கூடியவரையில் நமது பாரதமக்களுக்கு பரமேச்வரன் ப்ராசீன ஒழுக்கத்தையும், நவீன ஆடம்பரத்தில் வெறுப்பையும் ஈந்து அருள்புரிவாராக.

T, S. பாலசுப்ரமண்ய கனபாடிகள்,
வெங்கட்ரமண வைத்யசாலை,
மைலாப்பூர்—மதராஸ்.

சிறுவருக்கான சிறுகதைக் கொத்து.

கர்ணன்.

1. யாதவகுலத்தில் பிறந்தவன் சூரன் என்பவன். அவனுக்கு வஸுதேவன் என்று ஓர் பிள்ளையும், ப்ருதை என்ற ஓர் பெண்ணும் பிறந்தது. சூரனுடைய அத்தைமகன் குந்திபோஜன் என்பவன். இவ்விருவரும் சிறந்த ஸ்நேகிதர்கள். குந்திபோஜனுக்குக் குழந்தை இல்லை சூரன் போஜன் கேட்டபடியே தன் பெண்ணை ஸ்வீகாரமாக அவனுக்குக்கொடுத்தான். அது முதல் ப்ருதைக்குக்குந்தி என்றும் ஓர்பெயர் வந்தது.

2. குந்தி போஜனுடைய அரண்மனையில் தங்கிய துர்வாஸருக்குப் பணிவிடை செய்தாள். தவறாமல் ஒருவருஷம் தனக்கு உபகாரம் செய்த குந்தியிடம் ரிஷிக்குக் கருணை உண்டானது. பெண்ணே! இந்த மந்த்ரத்தால் எந்த தேவரை அழைக்கிறாயோ அந்த தேவர் வருவர். உனக்கு ஓர் குழந்தையையும் கொடுப்பர். என்று ஒரு மந்திரத்தை உபதேசித்தார். பெரியோருக்குச்செய்த பணிவிடை வீணாகுமோ?

3. குந்தி குழந்தையாதலால் அந்த மந்திரம் பலிக்குமா? பலிக்காதா? என்று அதைப் பரீக்ஷித்தாள். மந்த்ரத்தைச்சொல்லி சூர்யனை நினைத்தாள். சூர்யன் உடனேவந்துவிட்டான் அவனைக் கண்டு குந்தி பயப்பட்டாள் பெண்ணே!பயப்படாதே! துர்வாஸர் சொன்னபடி உனக்கு ஒரு குழந்தையைக் கொடுப்பேன் என்று

அவர் சொன்னார். குந்தி, ஸ்வாமி நான் கன்யை. என்னைத்தொடாதே! மன்னித்துவிடு என்றாள்.

4. பெரியோரை அழைத்து வீணாக அனுப்பாதே! சபித்து விடுவேன்! நான் சொன்னதைக்கேள்! உனக்கு நல்ல குழந்தைப் பிறப்பான். அவன் பிராமணர்கள் கேட்டால் எதையும் கொடுப்பான் என்று ஸூர்யன் சொன்னான். குந்தி பயந்து நின்றாள். ஸூர்யன் தனது அனுக்ரஹத்தால் ஓர் குழந்தையை உண்டுபண்ணினான். அதன்பெயர் கர்ணன். உடனே குந்தியைச் சிறு கன்யகையாக்கி சூர்யன் மறைந்துவிட்டான்.

5. குந்தி, கன்யகைக்குப் பிள்ளைபிறந்ததென்று பந்துக்கள் தன்னைப் பரிஹாஸம் செய்வார்களே! என்று பயந்தாள். இக்குழந்தை சரீரத்தோடு கூடவே கவசகுண்டலங்களும் பிறந்தன. இக்குழந்தையை குந்தி பெட்டியில் ரத்னங்களோடு வைத்து ஒரு நதியில் விட்டுவிட்டாள். தேரோட்டி ஒருவன் அப்பெட்டியை எடுத்தான். உள்ளே திறந்துபார்த்தான். அழகான குழந்தை பணத்துடனிருந்தது.

6. பணத்தோடு இருந்ததால் வஸுஷேணன் என்றுபெயர் வைத்தான். ராதை எனும் தன் மனைவியிடம் கொடுத்து வளர்த்தான். இவன் துர்யோதனனுடன் சேர்ந்து பாண்டவர்களை வெறுத்து வந்தான். இவன் தாய்தந்தை தெரியாதவன். ராஜ்யமில்லாதவன் என்று எல்லோரும்பரிஹாஸம் செய்தார்கள். ஆகையால் துர்யோதனன் இவனுக்கு அங்கதேசத்தைக்கொடுத்து அபிஷேகம் செய்துவைத்தான்.

7. ஒருநாளிரவு ஸூர்யன் கர்ணனிடம் ஸ்வப்நத்தில் வந்தான். உன்னைக்கொல்பவன் அர்ஜுனன். அவனுக்கு ஸஹாயமாக இந்த்ரன் ப்ராம்மண வேஷத்தோடு நாளைக்கு உன்னிடம் வருவான். உன்னுடன்பிறந்த கவசகுண்டலங்களைக் கேட்பான். கொடுக்காதே என்றான். ஒருவர்கேட்டால் இல்லையென்று நான் சொல்லமாட்டேன். யார் எதைக்கேட்டாலும் கொடுப்பதே என் வ்ரதம் என்றான் கர்ணன்.

8. ஸூர்யன் கர்ணனைப்பார்த்து, அப்படியானால் இந்திரனிடமிருந்து ஓர்சக்தி ஆயுதத்தையாவது வாங்கிக்கொள் என்றார். அதேபோல் மறுநாள் இந்த்ரன் வந்தான், கவசகுண்டலத்தை யாசித்தான். விஷயம் தெரிந்திருந்தும் கர்ணன் கவசத்தை அறுத்துக்கொடுத்தான். ரத்தம் ஆறாக ஓடிற்று. அதை லக்ஷி

யம் செய்யவில்லை அவன். ஸூர்யன் சொன்னபடி சக்தி ஆயுதத்தைக் கேட்டான்.

9. இந்த்ரன் கர்ணனுடைய தானத்தைக்கண்டு ஆச்சர்யமடைந்தான். அவன் கேட்டபடி சக்தியைக்கொடுத்தான், வாயாற அவனைப் போற்றினன். இதுவரை எவரும் இந்த மாதிரி தானம் செய்ததில்லை. கர்ண! நீ எவரைக்கொல்லவேண்டுமென்று விரும்புகிருயோ? அவர்மேல் இந்த சக்தியை எறி. அது அவனை நிச்சயமாய் கொன்று உன்னிடமே வந்துவிடும் என்றுசொல்லிக் கொடுத்தார்.

10. தானே தன் கவசத்தைக் கொடுத்தானல்லவா? ஆதலால் கர்ணன் விகர்த்தனனென்று அவனுக்குக் காரணப்பெயர் வழங்கிற்று, உலகில் உயர்ந்த கொடையாளி என்று பெயர் வாங்கினன். தானம் ஓர் சிறந்த தல்லவா? தானத்தால் உயர்ந்த நற்கதி கிடைக்கும். ஆதலால் நாமும் அவரவர் சக்திக்கேற்றபடி தானம் செய்து நன்மைபுரிவோமாக.

வாரவிருத்தாந்தம்.

யுக்தியுக்தம். 6௨ புதுச்சேரியில் புதியதாக ஓர் மாதர்ஸபை கூடியது. தற்கால நாகரீகத்தைச் சிலர் போற்றினும் சிலர் மாதாது கற்பையும் குடும்பபாணத்தையும் பாகவேலையையும்பற்றி அழகாகப் பேசினர். ஒருவர் நாகரீகமுள்ள ஓர் பெண் பரிசாரகன் பிணியால் பீடிக்கப்பட்டபொழுது புதிதாக சமையல்செய்தாள்' தன் உடல் அழகிற்கு உபயோகப்படுத்தும் 'ஸோப்பை' சமையலிலும் சேர்த்து அன்னத்திற்கு அழகுசெய்தாள்" என்ற கதையைக்கூறி ஸ்திரீகளுக்கு தர்மமே அவச்யமென வற்புறுத்தினள். யுக்தியுக்தமான சொல்லை எங்கிருந்தும் ஏற்கலாம். ஆதலின் பெண்மக்களின் கருத்துக்கிசைய நடப்பாராக.

அசக்தபோஷணம். 6௨ பெங்களூரில் ஷ்டிதர்மகார்யத்திற்காக இரண்டு பெண்மக்கள் 850 ரூ நன்கொடைகொடுத்தார்கள். வயதானதாலோ, அங்க ஹீநத்தாலோ வேலைசெய்து ஜீவிக்கமுடியாமலிருக்கும் அநாதைகளுக்கு அன்னமளிப்பது உயர்ந்த தர்மமாகும். ஆதலால் இப்பெண்மக்களுக்கு ஸௌமங்கல்யம் முதலிய ஸௌபாக்கியமுண்டாகுக.

வ்யாயாமமும் யோகமும். 6உ சிதம்பரம் ஸம்ஸ்கிருத கலா சாலை வருஷாந்தர விளையாட்டு பந்தயங்கள் நடந்தன. தேஹப் பயிற்சி உபாத்தியாயர் ஸ்ரீமான் வி. சுப்பராமய்யர் 15வகையான யோகாஸநங்களைப் போட்டுக்காட்டினர். இதைக்கண்டு எல்லோ ரும் ஆச்சரியமடைந்தனர். சரீரப் பயிர்ச்சியென்று அர்த்தமில் லாமல் மாணவர்கைகால்களை அசக்குவதைவிட குருபணிவிடை சூர்யநமஸ்காரம், ஸரியானபடி ப்ராணாயாமம் முதலியவைகளைச் செய்வாராகில் இஹபாசுகமுண்டு.

வித்யார்த்திக்கு அன்னதாநம்- 6உ திருச்சியில் தேசிய கலா சாலைத் தலைவர் தலைமையில் 36-வது வருஷோத்ஸவம் ஒரு போஜந சாலைக்கு நடந்தது. இதற்குக் கணியூர் கிருஷ்ணய்யர் போஜந விடுதி என்றுபெயர். 27-மாணவர்களுக்கு இலவசமாக இப் பெரியாரின் ஸந்ததியார் விடாமல் அன்னமளித்துவருகின்றனர். இவ் வுத்தம புண்யத்தைச்செய்யும் குலம் ஓங்கிவாழ்க! இத் தர்மம் சிறந்ததெனினும் வேதங்கற்கும் மாணவருக்குப் பிக்ஷை அளிப்பது மிகச் சிறந்ததாகும்.

ஸுகமாகத்திரும்புக! 10உ ஸ்ரீமான் கே. எஸ். வெங்கட்ர மணி என்ற வக்கீல் வடநாட்டிற்குக் கிளம்பினர். க்ஷேத்திரத் தீர்த்த யாத்ரையுடன் பல கலாசாலைகளுக்குஞ்சென்று திரும்புவார் இவர் தர்மாபிமானங்கொண்ட க்ரந்தகர்த்தாவுமாவர். "தேசபக் தன், கந்தன்" என்ற மதாபிமானம் ததும்பிய நூலை இயற்றி ஸ்ரீபரமாசார்யாளது கருணைக்குப் பாத்திரமானவர்.

ஸநாதநஸபை வாழ்க. விழுப்புரம் ரெயில்வே காலனியில் இப் பெயர்கொண்ட ஸபை சிலமாதங்களுக்குமுன் தோன்றியது. ஏனைய ஸபைகளைப்போலில்லாமல் ப்ரதி பாநுவாரமும் கீதோபன் யாஸம் நடக்கிறது. உபன்யாஸகர் ஓர் உத்யோகஸ்தரென அறிந்து ஸந்தோஷிக்கிறோம்.

பொதுஜநவாழ்வில் தர்மசாஸ்திரம். கும்பகோணம் இளைஞர் கல்விச்சங்கத்திணுதாவில் உள்ளூர் முனிஸீப் ஸ்ரீமான் வைத்யநாத அய்யர் தலைமையில் சென்னை வக்கீல் ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீனிவாஸ அய்யங்கார் ஷை விஷயமாக ஓர் உபன்யாஸம் ஆங்கிலத்தில்செய் தார். இத்தகையோர் மாணவர்களைச் சீர்திருத்துவது சிறந்த தர்மமாகும்.

ஆரோக்யத்தை அளிப்பவன். ஸ்ரீமான் எஸ். என். ஸின்ஹா என்பவர் சிலவாரமாக சென்னை மைலாப்பூரில் ஸூர்யநமஸ்கா

ரத்தைப்பற்றி ப்ரசாரம்செய்துவருகிறார். ஸூர்யோபாஸனையால் ஆரோக்யத்தையும், அக்னிபூஜையால் ஐச்வர்யத்தையும் அடைய லாமென தர்மநூல்கள் கூறுகின்றன. ச்ரத்தையுடன் நமது ஸதா சாரத்தைக் கைப்பற்றினால் கைகூடாததுண்டோ?

ஸதுபதேசம். சென்றவாரம் ஜோலார்பேட்டையில் காஞ்சியி லிருந்து ஓர் வித்வான் பல அரிய உபன்யாஸங்களைச்செய்தார். உள்ளூரிலிருந்து ஓர் ஆசிரியர் சிவராத்திரிமஹிமையைப்பற்றி பேசினார்.

ஸாயணபாஷ்யம். தற்காலத்தில் வேதமே வேண்டிய அளவு ப்ரசாரமடையாதபொழுது பாஷியத்தைப்பற்றி பேச்சேது? ஓர் பண்டிதர் ஸ்ரீஸாயணாசார்யாளைக் கண்டித்து உலகம் ஸாயணரை நன்கு உணரும்படிசெய்ததற்காக ஆஸ்திகர் அவருக்கு நன்றி செலுத்துவர். 13௳ வில்லிவாக்கம் எனும் சென்னைக்கடுத்த கிராமத்தில் ஆஸ்திகர் சிலர் தாங்கள் அத்யயநம்செய்ததைத்திரீய உபநிஷத்துக்களுக்கு ஸ்ரீஸாயணபாஷ்யத்தை உபன்யஸிக்கும்படி ஓர் பண்டிதரைக்கொண்டு ஏற்பாடுசெய்து முதல் உபன்யாஸம் நடந்தது. எப்படியோ எல்லோரும் விஷயமறிந்து நன்மை பெறுவதே நம் நோக்கம்.

யோகநிலை, ஐக்கிய மாகாண சர்வகலாசாலை சென்ற மாதம் 20௳ யோகபாடம் மாணவர்களுக்குக் கற்பிக்கக் குவலயாநந்த ஸ்வாமியை ஏற்பாடுசெய்து ஓர் உபன்யாஸம் செய்தது. கல்வி மந்திரி தலைமைவஹித்தார். உபன்யாஸகர் ஓர் யோகஆராய்ச்சி சாலை வைத்திருப்பதாகவும் யோகமீமாம்ஸைக்கு ஹெல்மட்ப்ராமி என்ற ஜர்மன் வைத்யர் மொழிபெயர்ப்புச் செய்வதாகவும் சொன்னார்.

ப்ரத்யக்ஷவெங்கடேசர். 13௳ ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகள் திருப்பதிவிஜயம்செய்தார். பலகோடிபக்தர்கள் பரமாசார்யாளை உபசரித்து பரமானந்தம் அடைந்தனர். பாபத்தை அகற்றுவது என்பது வேங்கடம் என்ற பதத்திற்கு பொருள். வெங்கடாசலபதி வீற்றுள்ள இடத் திற்கு பாபத்தை அகற்றுபவரில் சிறந்தபரமாசார்யாள் சென்றது பக்தர் பாக்கியமே. ஸ்ரீவத்ஸ வெ ஸோமதேவசர்மா.